Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2015 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

**Tuesday 20 October: 2 pm Australian Eastern Daylight Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 30 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*© Victorian Curriculum and Assessment Authority 2015*

**Part A** (Questions 1–3)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1**

1. (a) Why is the woman surprised by the man's action? **2**

___

___

(b) Why does the man want to test the products he has bought? **2**

___

___

___

___

Marks | You may make notes in this space.

**Text 2**

2. (a) Explain the siblings' dilemma over their father's role in planning the birthday party. **3**

(b) What evidence is there of the siblings' love for their mother? **4**

Marks

You may make notes in this space.

**Text 3**

3. Provide evidence from the text that Bala will be able to conduct the seminar successfully. **4**

**Part B** (Questions 4–6)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.

**Text 4**

4. Why did Kabilan quote the proverb, 'If the thieves do not change themselves, theft cannot be stopped'? **4**

   'திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க இயலாது' என்ற பழமொழியை, கபிலன் ஏன் எடுத்துக் கூறினார்?

**Text 5**

5. Why did Igaparan attribute his success to his grandmother's nurse? **5**

   இகபரன் ஏன், தனது வெற்றிகளுக்கெல்லாம் தனது பாட்டியின் தாதிதான் காரணம் என்கிறார்?

Marks | You may make notes in this space.

**Text 6**

6. (a) What are the benefits to Mary of having the procedure in Australia? **3**

ஒஸ்ரேலியாவில் அந்தச் செயற்பாட்டை மேற்கொள்வதனால் மேரி அடைகின்ற நன்மைகள் எவை?

(b) How does Mary demonstrate her responsible attitude to money? **3**

மேரி பணத்தின்மீது பொறுப்புணர்வுடையவள் என்பதை எவ்வாறு வெளிப்படுத்துகிறாள்?

**End of Section 1**

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2015 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 2: Reading and Responding (25 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 10 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in black or blue pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2015

**Part A** (Questions 7–8)
(10 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts (for example, by comparing, contrasting, summarising and/or evaluating) and convey the information appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

பெரும் பாராட்டுதலுக்குரிய நிகழ்ச்சி

கடந்த செப்ரெம்பர் **26** ம் திகதி கிங்ஸ்லான்ட் கல்லூரி மண்டபத்தில் நிதிசேகரிப்புக்காக நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன.

முதலில், மாதுமை இலங்கையின் வன்னிப் பகுதிக்குச் சென்றபோது ஒளிப்பதிவு செய்துவந்த காட்சிகளும் நேர்காணல்களும் திரையில் காண்பிக்கப்பெற்றன.

அங்குள்ள கிராமத்து மாணவர்களில் ஓரளவு வசதி உள்ளவர்கள் தூரத்திலுள்ள பாடசாலைகளுக்குத் துவிச்சக்கர வண்டிகளில் சென்று கற்றுவருகிறார்கள். துவிச்சக்கரவண்டி ஒன்றை வாங்க வசதியில்லாத பலர், உயர் கல்வி கற்கத் தகுதி பெற்றிருந்தும் படிப்பை நிறுத்திவிட்டுக் கூலி வேலைக்குச் செல்கிறார்கள். அவர்களுடனான பேட்டிகளும் காட்டப் பெற்றன. அங்குள்ள உயர்தர வகுப்புமாணவர்களுக்கு விஞ்ஞானகூட வசதிகள் இல்லை. இவர்களுக்கு மட்டுமல்ல ஆரம்பப் பள்ளிகளில்கூட அங்கு கல்வி உபகரண வசதிகள் மிகக் குறைவு. அவர்களுக்கு உதவுவதற்கு நிதி சேகரிப்புக்காகச் செலவுச் சுருக்கமாக நடத்தப்பெற்ற நிகழ்ச்சியே அது.

அன்று மேடையேறியவர்களில் மிகமூத்தவரின் வயது **17**. மிகவும் இளையவருக்கு **7** வயது.

தமது வயதை ஒத்த, வன்னியில் வாழும் மாணவர்களுக்கு உதவ நிதிசேகரிப்பு நிகழ்ச்சி என்றதும் நடனப்பள்ளியின் எல்லாமாணவர்களுமே, தாமாக முன் வந்து தவறாது பயிற்சிகளுக்கும் ஒத்திகைகளுக்கும் சென்று மிக உயர்தரமான நிகழ்ச்சிகளை மேடையேற்றினர்.

கிங்ஸ்லான்ட் கல்லூரி அதிபரிடம் மண்டபத்தைப் பயன்படுத்த அனுமதி கேட்டபோது, நோக்கத்தை அறிந்தவுடன், அவர் எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் மண்டபத்தைப் பயன்படுத்த மனமுவந்து உடன்பட்டார். நவீன ஒலி, ஒளி, திரை வசதிகள் கொண்ட அம்மண்டபம் நாளொன்றுக்குப் பத்தாயிரம் டொலரிலும் கூடிய தொகைக்கு வாடகைக்கு விடப்படுவதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அன்று நடனமாடிய பிள்ளைகள், பயிற்சிகளுக்கும் ஒத்திகைகளுக்கும், தமது கல்வி பகுதிநேரவேலைகள் என்பவற்றுக்கிடையில் நேரம் ஒதுக்கிப் பலதடவைகள் நடனப்பள்ளிக்குச் சென்றுவந்திருக்கிறார்கள். பலரது பெற்றோர்கள் காலையில் அவர்களது பிரதான பாடசாலைகளுக்கு மட்டுமன்றி, மாலையில் நடனப் பயிற்சிகளுக்கும் தமது வாகனங்களில் கூட்டிவந்து கூட்டிச் சென்றிருக்கிறார்கள்.

புதிய ஒலி, ஒளிப்பதிவு கருவிகளும் நாலுபக்கமும் முகம் பார்க்கும் கண்ணாடிகளும் பொருத்தப்பெற்ற மிக நவீன நடன வகுப்பறையைப் பல வாரங்கள் தொடர்ந்து பயன்படுத்த அவர்களது நடன ஆசிரியர், சரஸ்வதி கோபாலன் உடன்பட்டிருந்தார்.

கிங்ஸ்லான்ட் தமிழர் மட்டுமல்ல வேறுபலரும் சீட்டுக்களை வாங்கி ஆதரவு வழங்கியிருந்தார்கள். ஒளிப்பதிவையும் பேட்டிகளையும் பார்த்த பலர் உணர்ச்சி வசப்பட்டு மண்டபத்திலேயே நிதியுதவி செய்தார்கள்.

QUESTIONS

**Marks**

(a) How do the educational opportunities in Vanni compare with those in Australia? **4**

(b) How were the students supported in organising the fundraising program? **3**



PLEASE TURN OVER

8. Read the text and then answer in ENGLISH the questions that follow.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுகிறீர்கள்! கவனம் தேவை!

உயர்தரப் பரீட்சைகள் முடிவடைந்து ஒருமாதமாகிறது. இளைஞர்கள் பலர் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் பெற முயற்சிக்கிறார்கள். நேற்று மாத்திரம் மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பெற்றுள்ளார்கள். குறிப்பாக இவர்களுக்கும் ஏனையோருக்கும் சில ஆலோசனைகள் தரப்படுகின்றன.

சட்டவிதிகளுக்கும் வீதிச் சமிக்ஞைகளுக்கும் ஏற்றபடி வாகனங்களைச் செலுத்தவேண்டியது கட்டாயமானது. பாதசாரிகள் வீதியைக் கடக்கும்போது விட்டுக்கொடுப்பது அவசியமானது. ஆனால் அவர்கள் பயப்படாதவாறு சிறிது தூரத்திலேயே மெதுவாக நிறுத்தி, அவர்கள் நிம்மதியாகச் செல்ல வழிவிடுங்கள்.

அவற்றைவிட எங்கு சென்றாலும் தாமதமாகப் புறப்பட்டு அவசரமாக ஓடாமல், ஓரளவு முன்னரேயே புறப்பட்டால் நிதானமாகச் செலுத்தலாம். ஏனைய சாரதிகள் உங்களுக்கு விட்டுத்தரும் சமயங்களில், அவர்களுக்குக் கட்டாயம் நன்றிச் சமிக்ஞை செய்து காட்டுதல் மிகவும் விரும்பத்தக்கது. நீங்களும் தாராள மனத்துடன் மற்றவர்களுக்கு விட்டுக்கொடுங்கள். நீங்கள் தவறு செய்தால் மன்னிப்புச் சைகை காட்டுங்கள். பொலிசாரைக்கண்டோ படப்பிடிப்புக் கருவிகளைக் கண்டபோதோ மட்டுமன்றி, எப்போதுமே வேகக்கட்டுப்பாட்டுடன் செலுத்துங்கள்.

ஒழுங்கைகளை மாறும்போது பிறருக்கு எந்தவித இடையூறும் ஏற்படாதவாறு பொருத்தமான நேரத்தில் மட்டும் சமிக்ஞை செய்து மாறுவதுடன், பிறசாரதிகள் காணவியலாத மூலைகளில் வாகனம் செலுத்துவதைத் தவிர்த்தலும் அவசியம்.

மகிழ்ச்சியோ அல்லது துன்பமோ மிக அதிகமான சமயங்களிலும் நித்திரையின்றி இருக்கும் நேரங்களிலும் வாகனங்களை ஓட்டாதிருப்பது மிக்கநன்று. பாட்டுக்களையோ செய்திகளையோ கேட்பதற்கு நிலையங்களை மாற்றும் சிலநொடிகள்கூட அதிக கவனம் தேவை.

எல்லோரும் இன்புற்றிருப்போமாக!

QUESTIONS

**Marks**

(a) Why is this a critical time for this advice to be offered? **1**

(b) Describe in detail **two** consequences resulting from ignoring the advice given in the text. **2**

**Part B** (Question 9)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate an understanding of the stimulus text*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

9. Read the text and then answer the question in approximately 150 words in TAMIL on page 7.

அறிவித்தல்

மக்களின் குரல் இணையத் தொலைக்காட்சியில் செய்திவாசிப்பாளர் பதவி வெற்றிடங்கள் உள்ளன. விண்ணப்பிப்பவர்கள் தமிழைச் சரளமாகப் பேசக்கூடியவர்களாக இருத்தல் அவசியம். பேசுபவரின் உரை மொழி நடையை வைத்துக்கொண்டு அவர் எப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று அறிய இயலாதவகையில் பேசுதல் விரும்பத்தக்கது. ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும்போது சரியான ஒஸ்ரேலிய உச்சரிப்புடன் கூறவேண்டும்.

வேறுபட்ட தலைப்புகளில் செய்திகள் வரும்போது தெளிவான வேறுபாடு புலப்படும் வண்ணம் குரலை மாற்றி ஏற்றியும் இறக்கியும் வாசித்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப் பெறுபவர்கள் அவசியம் ஏற்பட்டால் அல்லாமல், எமது நிலையத்துக்கு வரத்தேவையில்லை. வீட்டில் இருந்தே மின்னஞ்சலில் கிடைக்கும் செய்திகளை வசதியான நேரம் வாசித்து இணையத்தளத்தில் சேர்க்க வேண்டும்.

தேவை ஏற்படும்போது தமிழ் பேசும் நாடுகளிலிருந்து வருபவர்களைப் பேட்டி காணவும் ஆங்கிலச்செய்திகளைத் தமிழில் மொழிபெயர்க்கவும் கேட்கப்படுவர். அத்துடன் தெரிவு செய்யப்பெறுபவர்கள் தமது வீட்டில் செய்தி வாசிப்பதற்கு என்று ஓர் அறையை ஒதுக்கித் தருதல் அவசியம். எமது தொழில்நுட்பவியலாளர்கள் ஒலி ஒளி புகாத வண்ணம் அந்த அறையை ஒழுங்கு செய்து, மிக நவீன கருவிகளைப் பொருத்துவார்கள். ஆயினும் கருவிகளைப் பொருத்தவும் அடிக்கடி வந்து திருத்த அல்லது மேம்படுத்தவும், அல்லது பதவியில் இல்லாது போனால் கழற்றி எடுத்துக் கொள்ளவும் சம்மதம் அளித்தல் அவசியம்.

சக்தி வாய்ந்த இலவச இணைய இணைப்புக்களும் வேலை செய்யும் நேரத்துக்குப் பொருத்தமான ஊதியமும் வழங்கப்பெறும். உமது தகைமைகளையும் அனுபவங்களையும் தெரிவிக்கும் விண்ணப்பத்தை மக்களிணையம். கொம் என்ற மின்னஞ்சல் விலாசத்துக்கு நவம்பர் **27** க்கு முன்னர் மின்னஞ்சல் செய்யவும்.

QUESTION

Write an email to apply for the advertised position, addressing the criteria and outlining your qualifications and experience. Give reasons for your interest in this position.

விளம்பரப்படுத்தப்பெற்ற இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் வகையில், மேற்படி தகவல்களுக்குப் பதிலளித்தும் உமது தகைமைகள், அனுபவங்கள் என்பவற்றைத் தெரிவித்தும், இப்பதவியில் உமது விருப்பத்துக்கான காரணங்களைக் கூறியும் ஒரு மின்னஞ்சலை எழுதுக.

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number | | | | | | | | | | | |

Centre Number | | | | | | |

Tamil
Continuers Level

Question 9

**End of Section 2**

| Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |

**2015 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (20 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2015

**Section 3** (Questions 10–12)
(20 marks)

---

*Your response will be assessed on how well you:*
- *demonstrate depth of treatment of information, ideas and/or opinions*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

Answer ONE question from this section in approximately 250 words in TAMIL.

10. Write the script of a short play in which the main characters are a mother and her teenage child. The mother refuses to allow her teenager to take Tamil as a Year 12 subject, but the teenager is determined and gives several reasons.

    உயர்தரப் பரீட்சைப் பாடங்களில் ஒன்றாகத் தமிழைத் தெரிவுசெய்ய மறுக்கும் தாயாருக்கும் பல்வேறுபட்ட காரணங்களைக் கூறித் தமிழைப் பரீட்சைப் பாடமாகத் தெரிவு செய்ய உறுதிபூண்டுள்ள அவரது கட்டிளமைப்பருவப் பிள்ளைக்கும் இடையில் நடைபெறும் சிறிய மேடை நாடக உரையாடலை எழுதுக.

11. 'The choice of educational courses by students today seems to be guided by consideration of the amount of money to be earned rather than enjoyment and self-satisfaction.' Write an article commenting on this statement and establishing your point of view.

    'இன்றைய மாணவர்களின் கல்வித் தெரிவுகளும் முயற்சிகளும் சுயதிருப்தியையோ மனமகிழ்ச்சியையோ அடைவதைவிடப் பணம் சம்பாதிப்பதையே பெருநோக்கமாகக் கொண்டுள்ளன.' இக்கூற்றை மதிப்பீடு செய்து பொருத்தமான தகவல்களைத் தந்து உமது சொந்தக் கருத்தை நியாயப்படுத்தி ஒரு கட்டுரை எழுதுக.

12. Write a reflective narrative describing the event that entirely changed your opinion about a neighbour. Your narrative may be published in the *Canadian Branch Times*.

    அயலவர் ஒருவர் பற்றி அதுவரை உமக்கிருந்த அபிப்பிராயத்தை முற்றாக மாற்றிய அந்தச் சம்பவத்தை விபரித்து ஒரு கட்டுரை எழுதுக. உமது கட்டுரை கனடாவில் வெளிவரும் சஞ்சிகை ஒன்றில் வெளியிடப்படலாம்.

You may make notes in this space.

Question Number:

**End of Section 3**